## இலங்கை வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகள் - 2017

இலங்கை வங்கியினதும் (''வங்கி'') வங்கி மற்றும் அதனது துணைக் கம்பனிகளினதும் (''குழு'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்றுக்கள், விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 வங்கிக்கான விசேட நியதிச்சட்ட ஏற்பாடுகள்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவினால் முன்னைய நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களின் பிரகாரம் 1992 மே 14 இன் 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அவரின் கட்டளைக்கமைய மேற்குறிப்பிட்ட நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியிலுள்ள ஏற்பாடுகளிலிருந்து வங்கி விலக்களிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டு 1992 ஏப்ரல் 10 ஆம் திகதிய ஈஏ02/பீசீ/பிபீ/01 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கையின் மூலம் அவரால் அறிவிக்கப்பட்டவாறு வங்கியானது சகல திறைசேரி மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வங்கியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வங்கி மற்றும் குழுவின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வங்கியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

வங்கியின் ஒருங்கிணைந்த பகுதியாகவுள்ள உள்நாட்டு வங்கிப் பிரிவு, கரை கடந்த வங்கிப் பிரிவு, இஸ்லாமிய வங்கிப் பிரிவு மற்றும் வெளிநாட்டுச் செயற்பாடுகள் என்பவற்றின் நிதிக்கூற்றுக்களின் ஒன்றிணைப்பை வங்கியின் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கியுள்ளன. தொகுதியின் நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ்) இணங்குகின்ற வங்கி, அதன் துணைக் கம்பனிகள் மற்றும் உப கம்பனிகள் என்பவற்றின் நிதிக்கூற்றுக்களின் ஒன்றிணைப்பை உள்ளடக்கியுள்ளன.

ஏழு துணைக் கம்பனிகளையும் நான்கு கம்பனிகளையும் குழு உள்ளடக்குகின்றது. துணைக்கம்பனிகளானது நிதி சேவைகள், போக்குவரத்து சம்பந்தமான சேவைகள், மின்வலு உற்பத்தி, ஹொட்டல் மற்றும் விதிவிடம் மற்றும் சொத்து முகாமைத்துவ நடவடிக்கைகளில் போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. உப கம்பனிகளால் நடாத்தப்பட்ட சில நடவடிக்கைகளில் அலகு பொறுப்பு நிதியத்தின் முகாமைத்துவம், பங்கு தரகு, சொத்து சம்பந்தமான விடயங்கள் உள்ளடங்குகின்றது.

ஒவ்வொரு துணைக்கம்பனிகளிலும் உப கம்பனிகளிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறும் வங்கியின் நேரடி முதலீட்டு நிலைமை பின்வருமாறு உள்ளன.

| கம்பனியின் பெயர் | முதலீட்டு நிலைமை | | கூறப்பட்ட பங்கு மூலதனத்தின் சதவீதமாக உரிமைத்துவம் | |
|---|---|---|---|---|
| | 2017 ரூபா மில்லியன் | 2016 ரூபா மில்லியன் | 2017 | 2016 |
| **துணைக் கம்பனிகள்** | | | | |
| - **விலைகூறப்பட்ட கம்பனிகள்** | | | | |
| புறபெட்டி டெவலப்மென்ற் பிஎல்சீ | 860 | 860 | 95.55 | 95.55 |
| மேர்ச்சன்ற் பாங் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் பைனான்ஸ் பிஎல்சீ | 2,255 | 2,255 | 74.49 | 74.49 |
| - **விலைகூறப்படாத கம்பனிகள்** | | | | |
| பீஓசி மனேஜ்மென்ட் அன்ட் சப்போட் வரையறுக்கப்பட்ட சேவிசஸ் (தனியார்) கம்பனி | 1 | 1 | 100.00 | 100.00 |
| பீஓசி புறபெட்டி டெவலப்மென்ற் அன்ட் மனேஜ்மென்ட் (தனியார்) கம்பனி | 1,010 | 1,010 | 100.00 | 100.00 |
| பீஓசி டிரவல்ஸ் (தனியார்) கம்பனி | 2 | 2 | 100.00 | 100.00 |
| ஹொட்டேல்ஸ் கொழும்பு (1963) கம்பனி | 101 | 101 | 99.99 | 99.99 |
| இலங்கை வங்கி (யூகே) கம்பனி | 2,684 | 2,684 | 100.00 | 100.00 |
| **துணைக் கம்பனிகளிலுள்ள மொத்த முதலீடுகள்** | **6,913** | **6,913** | | |
| கழி - நட்டக்கழிவுக்கான ஏற்பாடு | (400) | (700) | | |
| **துணைக் கம்பனிகளிலுள்ள தேறிய முதலீடுகள்** | **6,513** | **6,213** | | |
| **உப கம்பனிகள்** | | | | |
| - **விலைகூறப்படாத கம்பனிகள்** | | | | |
| வரையறுக்கப்பட்ட சீபாங் அசற் மனேஜ்மென்ட் (தனியார்) கம்பனி | 31 | 31 | 43.36 | 43.36 |
| லங்கா செக்கியூரிட்டீஸ் (தனியார்) கம்பனி | 42 | 42 | 41.60 | 41.60 |
| சவ்தேர்ன் டெவலப்மென்ட் பைனான்சியல் கம்பனி | 25 | 25 | 41.67 | 41.67 |
| ரான்ஸ்நெஷனல் லங்கா றெகோர்ட்ஸ் சொலுசன்ஸ் (தனியார்) கம்பனி | 20 | 20 | 24.69 | 24.69 |
| **உப கம்பனிகளிலுள்ள மொத்த முதலீடுகள்** | **118** | **868** | | |
| கழி - நட்டக்கழிவுக்கான ஏற்பாடு | (25) | (25) | | |
| **உப கம்பனிகளிலுள்ள தேறிய முதலீடுகள்** | **93** | **93** | | |
| **மொத்த முதலீடுகள்** | **6,606** | **6,306** | | |

## 2.2.2 வங்கியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

நியமத்தின் 59(இ) பந்தியின் பிரகாரம், நிதிச் சொத்து அல்லது சொத்துக்களின் தொகுதியானது கடன்கொடுத்தோர், கடன் வாங்கியோரின் நிதிக் கஷ்டத்துடன் தொடர்பாக பொருளாதார அல்லது சட்ட நோக்கங்கள், கடன்கொடுத்தோர் கருத்திற் கொள்ளாத வகையில் சலுகையொன்றை கடன்வாங்கியோருக்கு வழங்கல் போன்றவற்றை உள்ளடக்கி நட்டக்கழிவுக்குட்படுதலை நோக்கமானது சான்றுறுதிப்படுத்துகின்றது. எனினும், முக்கிய நிதிக்கஷ்டங்களை கொண்ட சில வாடிக்கையாளர்கள் மற்றும் வசதிகள் மீளமைக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் நட்டக்கழிவு மதிப்பீட்டில் சரியான நேரத்தில் இனங்காணப்படவோ ஒரு ஏற்பாடாகவோ இருக்கவில்லை.

#### 2.2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பல ஆண்டுகளுக்கு மேலாக பதிவழிக்கப்படாது கொண்டுவரப்பட்ட நடைமுறை வேலைகளின் கீழ் காட்டப்பட்ட ரூபா 5,061,285 ஏற்பாட்டிற்காக விரிவான பட்டியல் போன்ற தகவல்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

#### 2.2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

ஏரீஎம் செலுத்த வேண்டியவைகள் மற்றும் பெற வேண்டியவைகள் தொடர்பில் லங்கா கொடுப்பனவு முறைமையின் கூற்றுக்களிற்கும் வங்கியின் முறைமைக்கும் இடையில் முறையே ரூபா 385.8 மில்லியன் மற்றும் ரூபா 408.9 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், குழுவின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 30,117 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 30,816 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை பதிவுசெய்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 698.5 மில்லியன் முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. ரூபா 33.1 மில்லியனால் மீளாய்வாண்டிற்கான வட்டிச் செலவினம் அதிகரித்திருந்த போதிலும் ரூபா 38 மில்லியனால் வட்டி வருமானம் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டின் போது துணைக் கம்பனிகள் நீங்கலான வங்கியின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 31,189 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 30,343 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 846 மில்லியன் குறைவொன்றை சுட்டிக்காட்டுகின்றது. ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 36.658 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும், ஏனைய செயற்பாடு வருமானம் ரூபா 3.379 மில்லியனால் குறைவடைந்திருந்தமையும் ரூபா 32.259 மில்லியனாக வட்டி செலவினம் அதிகரித்தமையும் இந்தக் குறைவுக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 இலாபத்தன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கிச் சேவைகளை வழங்குவதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் 26 சதவீத வளர்ச்சியொன்றை காட்டியது. கால வைப்புக்கள் 36 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், வங்கியியல் சேவைக்கான கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 44 சதவீதத்தால் அதிகரித்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வங்கியல்லாத சேவைகள் மூலம் உழைக்கப்பட்ட 42 சதவீத குறைவொன்றைக் காட்டியது. ஏனெனில் உப கம்பனியான மிரேகா கபிட்டல் லான்ட் பிறைவேட் லிமிட்டட் கைதவிர்ப்பிலிருந்து பெறப்பட்ட மூலதன இலாபமாக ரூபா 3.1 பில்லியன் தொகை 2016 ஆம் ஆண்டிற்கான வங்கியல்லாத சேவைகளில்லாத வருமானத்தில் உள்ளடக்கப்பட்டது.

(இ) மொத்த வருமானத்தில், வட்டி வருமானத்தை 90 சதவீதம் உள்ளடக்கியதுடன் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மூலம் பெறப்பட்ட வட்டி வருமானத்தை 73 சதவீதம் உள்ளடக்குகின்றது.

(ஈ) வியாபார மற்றும் நிதி முதலீடுகளிலிருந்தான கட்டணம், தரகு வருமானம் மற்றும் தேறிய மிகைகள் முறையே 5 சதவீதம் மற்றும் 2 சதவீதத்தால் மொத்த வருமானத்திற்கு பங்களித்திருந்தது. ஏனைய செயற்பாட்டு வருமானமானது மொத்த வருமானத்தின் 3 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(உ) ரூபா 3.3 பில்லியன் தொகையான கையிலுள்ள தங்கம் மீதான நியாய பெறுமதி சீராக்கத்தால் ஏனைய செயற்பாட்டு செலவினம் 21 சதவீதத்தால் குறைவடைந்தது.

### 3.2.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

-----------------------------------------------------------------------------------------

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் மூலதன போதுமை விகிதம் 2016 ஆம் ஆண்டில் 8.7 சதவீதத்திலிருந்து 2017 ஆம் ஆண்டில் 10.8 சதவீதத்திற்கு அதிகரித்திருந்ததுடன் வங்கியின் திரவத்தன்மை விகிதம் 2016 ஆம் ஆண்டில் 21.6 சதவீதத்திலிருந்து 2017 ஆம் ஆண்டில் 27.2 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.

(ஆ) வங்கியின் சராசரி உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஈ) 2011 ஆம் ஆண்டில் 33.5 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டின் 20.9 சதவீதமாக படிப்படியாக குறைவடைந்தது. 2011 ஆம் ஆண்டிலிருந்து வங்கி மூலதனத்தை முகாமை செய்வதன் மூலம் போதுமான வருமானத்தை அடைவதற்கு வங்கி திருப்திகரமான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. வங்கியின் ஒதுக்கங்கள் படிப்படியாக அதிகரித்திருந்த போதிலும் உயர் ஆர்ஓஈ பெறுமதியானது வங்கியால் அடையப்பெற்றிருக்கவில்லை.

(இ) வங்கியின் சராசரி சொத்துக்கள் மீதான வருமானம் (ஆர்ஓஏ) 2011 ஆம் ஆண்டில் 2.1 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 1.7 சதவீதத்திற்கு படிப்படியான குறைவடைந்திருந்தது.

(ஈ) வங்கியின் வருமானத்திற்கான கிரய விகிதம் கடந்த ஆறு ஆண்டுகளின் போது 51.1 சதவீதத்திலிருந்து 38.4 சதவீதத்திற்கு படிப்படியாக குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------------------------

### 4.1 செயலாற்றல்

------------------------------------

### 4.1.1 திட்டமிடல்

------------------------------

2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்காக வங்கியினுடைய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், செயல்நடவடிக்கைத் திட்டமானது வருடாந்த் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், கிடைக்கத்தக்கதாகவுள்ள செயல்நடவடிக்கைத் திட்டமானது 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டின் காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்தது.

**4.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு**

---

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களானது ரூபா 1,219,914 மில்லியனாகவிருந்ததுடன் இது ரூபா 1,047,189 மில்லியன் முன்னைய ஆண்டின் மீதியுடன் ஒப்பிடும் போது 16 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டியது. மேற்கூறப்பட்ட அதிகரிப்புக்கான பிரதான காரணமாக மீளாய்வாண்டின் போது காலவைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பாகவிருந்தது. மேற்கூறப்பட்ட மீதிகளில், மொத்த நிலுவையில் ரூபா 861,246 மில்லியன் அல்லது 71 சதவீதமான காலவைப்புக்கள், மேலதிக பற்றுக்கள் மற்றும் தனிப்பட்ட கடன்களை உள்ளடக்கியது. 2017 ஆம் ஆண்டின் போது காலவைப்புக்கள் 29.1 சதவீத அதிகரிப்பொன்றை காட்டியதுடன், அனைத்துக் கடன்களும் அதிகரிக்கும் போக்கொன்றை காட்டியதுடன் மேற்கூறப்பட்ட கடன் வெளிப்படுத்தல்களில் ரூபா 346,809 மில்லியன் அல்லது 31 சதவீதம் அரச நிறுவனங்களிலிருந்து பெறவேண்டியவைகளையும் மீதமாகவுள்ள 69 சதவீதம் அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவைகளாகவுள்ளது,

(ஆ) ஈடுவைக்கப்பட்ட பிணைகள் மற்றும் வாடிக்கையாளரின் கடன் தீர்க்கும் தன்மை என்பவற்றை முறையாக மதிப்பீடு செய்யாமல் குறித்த சில கடன்கள் மற்றும் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமை தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், கூட்டிணைந்த வாடிக்கையாளர்களிடமிருந்து வணிகத்தின் ஸ்தாபிப்பு தொடர்பான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் சட்டரீதியான ஆவணங்களை பெறுவதன் மூலம் வாடிக்கையாளர் கடன் மதிப்பீட்டை ஆக்கபூர்வமாகவும் காலரீதியாகவும் கண்காணிப்பதை வங்கி மேற்கொண்டிருக்கவில்லை. ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களுடன் தொடர்புடைய சில சந்தர்ப்பங்களில் காப்புறுதிப் பூட்கைகள் பெறப்பட்டு/ முறையாக புதுப்பிக்கப்பட்டு ஒழுங்கான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், முற்பணங்களிற்கான தொடர்புடைய கோவைகள் உரிய ஆவணங்கள் மற்றும் தகவல்களுடன் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களானது ரூபா 34,261 மில்லியனானதுடன் 2014 ஆம் ஆண்டிற்கான ரூபா 31,754 மில்லியன் சொல்லப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடும் போது 7.89 சதவீத அதிகரிப்பொன்றை காட்டியது. வங்கியின் செயற்பாடற்ற விகிதமானது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2.98 சதவீதத்திலிருந்து 2.80 சதவீதத்திற்கு 2017 ஆம் ஆண்டில் குறைவடைந்தது. ஆகையால், மீளாய்வாண்டிற்காக சாதகமான நிலைமையைக் காட்டியது.

(i) மீன்சந்தை பேலியகொட, கல்வான, ஆனையிறவு மற்றும் இஸ்லாமிய வங்கி பிரிவின் நான்கு கிளைகளில் முறையே 38 சதவீத, 29 சதவீத, 25 சதவீத மற்றும் 17 சதவீத அதிகூடிய செயற்பாட்டு விகிதத்தை பதிவு செய்திருந்தது என மேலும் இனங்காணப்பட்டது. அந்த இரண்டாவது கூட்டிணைந்த கணக்கு மேலதிகமாக மொத்தமாக ரூபா 5,570,078,818 என்பீர ஒன்று கையாளப்படுகின்றது.

(ii) வங்கியின் அட்டை நிலையம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 99,670 கடன் அட்டைகளை வழங்கியிருந்ததுடன் அத் திகதியில் உள்ளவாறான மொத்த நிலுவை மீதிகள் ரூபா 3,721 மில்லியன் தொகையாகும். அதில் ரூபா 181 மில்லியன் தொகை அல்லது 0.05 சதவீதம் செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், அட்டைகளை பெற்றதிலிருந்து 2017 திசெம்பர் 31 வரை தனியொரு தவணைப்பணத்தையேனும் செலுத்தியிருக்காத அட்டை உடமையாளர்களின் எண்ணிக்கை 92 ஆக காணப்பட்டதுடன் மொத்த நிலுவைத் தொகை ரூபா 1.3 மில்லியனாக இருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்ட மூலதனம் மற்றும் வட்டி என்பன முறையே ரூபா 10 மில்லியன் மற்றும் ரூபா 14 மில்லியன் ஆக காணப்பட்டன.

(iii) வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் குத்தகை வசதிகளாக ரூபா 48,436 மில்லியன் அல்லது 3.9 சதவீதத்தை வங்கி வழங்கியிருந்தது. மொத்தக் குத்தகை வெளிப்படுத்தலில் ரூபா 13,674 மில்லியன் மீதி அல்லது 28 சதவீதம் அரசாங்கம் மற்றும் அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளிடமிருந்து (எஸ்ஓஈ) பெறவேண்டியவைகளாகவும் சொல்லப்பட்ட தொகையானது குத்தகை வசதிகளின் 3,307 எண்ணிக்கையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதில் ரூபா 12,134 மில்லியன் தொகை அல்லது 91 சதவீதம் 2,278 குத்தகை வசதிகள் தொடர்பாக நிதி அமைச்சிடமிருந்து பெறவேண்டியவைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

மேலும், தெஹிவளை சுப்பர் கிளை மற்றும் பெற்றா கிளைகளில் ரூபா 273 மில்லியன் கூட்டுத்தொகை அதிகூடிய செயற்பாடற்ற குத்தகை வெளிப்படுத்தலாக இனங்காணப்பட்டிருந்தது.

2017 ஆம் ஆண்டின் இறுதியில், எபேர்ட் சில்வா ரூறிங், நெடுஞ்சாலை துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு, மற்றும் வரையறுக்கப்பட்ட அவ்ரோ ரிவர்ஸ் (தனியார்) கம்பனியானது அதிகூடிய 3 செயற்திட்ட குத்தகை வாடிக்கையாளராக இனங்காணப்பட்டிருந்ததுடன், அத்தகைய நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட குத்தகை வசதிகள் 36 ஆகும்.

மொத்த குத்தகை மீதியில், மீகஹரிய மற்றும் மொனராகலை கிளைகளிலுள்ள இரண்டு வாடிக்கையாளர்களிற்கான பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 4,368,906 தொகையானது 2017 ஆம் ஆண்டின் போது பற்று வைக்கப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது ஏலமிடுதல் ஊடாக நீண்டகால நிலுவையாகவுள்ள தங்கநகை அடகுப் பொருட்களின் பெரும் பகுதியை ஏலத்திற்கு போட்டதன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாடற்ற தங்கநகை அடகு முற்பணங்கள் ரூபா 1,185 மில்லியனிலிருந்து ரூபா 596 மில்லியன் வரை படிப்படியாக குறைவடைந்திருந்தது.

(ஈ) கடந்த நான்கு வருடங்களின் போது நிலுவையாகவுள்ள கடன்கள் மற்றும் முற்பணங்களுடன் தொடர்பான மூலதன மற்றும் வட்டித் தொகையின் பதிவழிப்பானது அதிகரிக்கப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்ட மொத்த மூலதனம் ரூபா 1,169 மில்லியானனதுடன் இது வங்கியின் 12,014 வாடிக்கையாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேற்கூறப்பட்ட நிலுவையுடன் தொடர்புடைய வட்டி ரூபா 830 மில்லியானனதுடன் மூலதனம் ரூபா 1143 மில்லியன் நிலுவையாகவுள்ள கடன்கள் மற்றும் முற்பணங்களுடன் தொடர்பாக ரூபா 699 மில்லியன் வட்டி 2017 ஆம் ஆண்டின் போது அறவீட்டு விற்பனைகளால் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் பதிவழிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 11661 ஆனதுடன் பதிவழிக்கப்பட்ட மேலதிக பற்றின் எண்ணிக்கை 310 ஆகவிருந்தது. பதிவழிக்கப்பட்ட தொகையில், 50 சதவீதத்திற்கு மேலானவை அச்சுவேலி, சுன்னாகம், மற்றும் கிளிநொச்சி கிளைகளால் விசேடமாக வடமாகாண கிளைகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட கடன்களானது 2009 ஆம் ஆண்டின் போருக்கு பின்னர் அகதிகளாக (உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்) முகாம்களிலுள்ளவர்களுக்கு வீடமைப்பு கடன்கள், சுய வேலைவாய்ப்பு கடன்கள், கமத்தொழில் கடன்கள் மற்றும் நுழைவு கடன்களாகவும் கொடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கடன்கள் வழங்கும் போது முறையான இனங்காணப்பட்ட முகவரிகளை உறுதிப்படுத்தல் மற்றம் ஏனைய வழமையான கடன் இயலுமை பரீட்சிப்புக்கள் போன்றன வங்கியில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 வங்கியின் சந்தைப் பங்கு

வங்கித் துறையில் சந்தை முன்னோடி நிலையை வங்கி சொந்தமாக்கியிருந்த போதிலும் வங்கியின் தற்போதைய சந்தைப் பங்கானது தற்போதைய வங்கி நிலைமையின் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளின் போது அதிகரிக்கும் போக்கு எதனையும் காட்டியிருக்காதமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) கடன்கள் மற்றும் முற்பணங்கள்

| | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
| வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூபா. மில்லியன்) | 1,219,914 | 1,047,190 | 869,316 | 777,505 | 755,385 |
| சந்தையின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூபா. மில்லியன்) | 5,791,214 | 5,007,522 | 4,258,330 | 3,453,875 | 3,079,441 |
| வங்கியின் சந்தைப் பங்கு (%) | 21.06 | 20.91 | 20.41 | 22.51 | 24.53 |

### (ஆ) வைப்புக்கள்

| | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
| வங்கியின் மொத்த வைப்புக்கள் (ரூபா. மில்லியன்) | 1,511,409 | 1,229,573 | 1,066,341 | 916,421 | 819,891 |
| சந்தையின் மொத்த வைப்புக்கள் (ரூபா. மில்லியன்) | 7,399,006 | 6,295,559 | 5,403,131 | 4,686,306 | 4,169,520 |
| வங்கியின் சந்தைப் பங்கு (%) | 20.4 | 19.5 | 19.7 | 19.6 | 19.7 |

### (இ) தரப்படுத்தல்கள்

2017 ஆம் ஆண்டின் வங்கித் துறையில் வங்கியின் தரப்படுத்தல் நிலைமை பின்வருமாறு இருந்தது.

#### (i) உலகளாவிய தரப்படுத்தல்

2017 ஆம் ஆண்டின் போது Fitch தரப்படுத்தல்கள் வங்கியின் International Long-term Issuer Default தரப்படுத்தலை "B- with negative outlook" ஆக மீள உறுதிப்படுத்திய அதேநேரம் "B+ with stable outlook" ஐ மீள உறுதிப்படுத்தியது.

#### (ii) உள்ளூர் தரப்படுத்தல்

2017 ஆம் ஆண்டின் போது பிற்ச் றேரிங்ஸ் லங்கா லிமிட்டட் வங்கியின் தேசிய நீணடகால தரப்படுத்தலை "AA+ (lka) with stable outlook" ஆக மீள உறுதிப்படுத்தியதுடன் ஐசிஆர்ஏ லங்கா லிமிட்டட் கடன் தரத்தின் தரப்படுத்தலை "(SL) AAA with stable outlook" ஆக வழங்கியது.

## 4.3 முகாமைத்துவ நடவடிக்கைகள்

---

(அ) மனித வள முகாமைத்துவம் இலங்கை வங்கியில் இலங்கை அரச வங்கியினால் முதற்தரமாக இருக்கின்ற போதும் ஒவ்வொரு பிரிவுகளினான அடிப்படை தகைமைகள் தெரிவு செய்தல் முறைமை நேர்காணல் மற்றும் மதிப்பீட்டு நிபந்தனைகள் போன்ற முறைமைகளை உள்ளடகின்ற ஆட்சேர்ப்பு (எஸ்ஓஆர்) திட்டமொன்று இருக்கவில்லை. இலங்கையில் இயக்குனர் சபைகள் (பீஓடீ) 2015 மே 25 இல் நடைபெற்ற அதனுடைய கூட்டத்தில் 600 பயிற்சி பதவி உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கு அனுமதி வழங்கியிருந்தது. எனினும் சொல்லப்பட்ட எண்ணிக்கையான வெற்றிடங்கள் 2015 சனவரி 25 இலிருந்து 2017 ஒக்தோபர் 25 வரையிலும் 1500 வரை 4 மடங்காக அதிகரித்திருந்தது.

2017 ஒக்தோபர் 06 ஆந் திகதிய விஞ்ஞாபனத்தின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான வெற்றிடங்களின் எண்ணிக்கை மேற்கூறப்பட்ட பதவிக்காக 980 ஆகவிருந்தது. எனினும், மேற்கூறப்பட்ட மிகையை பராமரிப்பதற்கு தேவையான வங்கி நிதியுடைய கருத்திற் கொள்ளாமையால் 520 மிகையான உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்துவதற்கு சபை தீர்மானித்து ஆரம்பத்தில் இயக்குனர் சபையானது நான்கு சிததியடைந்த பரீட்சார்த்திகளுக்கு (1:4) நான்கு சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு ஒன்று என்ற விகிதமாக தீர்மானித்திருந்த போதிலும், இறுதியாக 11,520 அனைத்து சித்தியடைந்த பரீட்சார்த்திகளும் நேர்காணலக்கு உட்படுத்தப்பட்டு நேர்காணல் குழுவின் உறுப்பினர்களுக்கு நேர்காணலக்கு உட்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அடிப்படை மீது ரூபா 4,099,050 அமர்தல் படிகளாக செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 3,389,160 தொகை ஏனைய செலவினங்களுக்காக செலவழிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) சொத்து முகாமைத்துவம்

நிலையான சொத்துக்கள் முத்திரையிடப்படாததுடன் அத்தகைய நிலையான சொத்துக்களின் அமைவிடங்கள் தொடர்பான தகவல்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட தகவல்கள் இன்மையால் பௌதீக பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு கஷ்டமாகவிருந்தது. மேலும், கொள்வனவு செய்யப்பட்ட துப்பாக்கிகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### (இ) ஏரீஎம் முகாமைத்துவம்

ஏரீஎம் பற்றாக்குறைக்காக ஏனைய சொத்துக்களின் கீழ் தனிப்பட்ட கணக்கு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை இந்த பற்றாக்குறையின் மீதியானது பல வருடங்களிற்கு மேலாக அதிகரித்திருந்ததுடன் இது 2015,2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 6,804,908 ரூபா 19,232,292 மற்றும் ரூபா 27,083,541 ஆகவிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொல்லப்பட்ட பற்றாக்குறைகளாக எந்த வித இணக்கமும் இல்லாமல ரூபா 12 மில்லியன் ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### (ஈ) விபரிக்கப்பட்ட நலன்புரி திட்டம்

ஐஎவ்ஆர்ஜசீ 14 இன் பிரகாரம், விதவைகள், தபுதாரிகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியம் தொடர்பாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8.7 மில்லியன் மிகையொன்று விபரிக்கப்பட்ட நலன்புரி சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டும் எனினும், அத்தகைய மிகைகள் ஐஎம்ஆரஜசீ 14 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் விபரிக்கப்பட்ட நலன்புரி சொத்தாக இணங்காணப்பட்டிருக்கவில்லை.

**(உ) முதலீட்டு சொத்து முகாமைத்துவம்**

யோர்க் வீதியிலுள்ள 261,610 சதுர வடிவிலுள்ள 6 தொடர்மாடி கட்டிடங்களில் 60 சதவீதத்திற்கு மேலான 2013 இலிருந்து விளைவற்றிருந்தது. 2016 ஒக்தோபர் 17 ஆந் திகதியே மதிப்பிட்டு அறிக்கையின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 3.413 மில்லியனாகவிருந்தது. மேலும், 2010 இல் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தின் சிவில் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அமைப்பு ரீதியான மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், அமைப்புரீதியான கூறுகளை கொண்டுள்ள இநக்கலின் அதிகமான கடுமையான பின்னடைவொன்றாகவிருந்ததுடன் கட்டிடங்கள் தொடர்பாக 15 சிபாரிசுகள் பிரசுரிக்கப்பட்டது. எனினும், அன்றுவரை வங்கியானது அத்தகைய சிபாரிசுகளை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

**(ஊ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

வங்கியானது மெற்றோப்பொலிறன் கிளையொன்றினை செயற்படுத்தும் நோக்கத்திற்காக 5 ஆண்டுகள் காலப்பகுதிக்காக வாடகை அடிப்படையில் வைத்தியசாலை வீதி கொழும்பு 01 இல் கட்டிடமொன்றை பெறவதற்கு தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. 2013 இலிருந்து இந்த கட்டிடத்திற்காக ரூபா 321 மில்லியன் வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 செப்தெம்பர் 16 இல் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் கிளையானது 2014 யூலை 21 இல் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. ஆகையால் கட்டிடமானது 10 மாதங்கள் காலப்பகுதிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட வாடகை உடன்படிக்கையின் கீழ் முழு கட்டிடமும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கீழ், முதலாவது மற்றும் மூன்றாவது மாடிகள் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது ஆகையால் நான்காவது, ஐந்தாவது மற்றும் ஆறாவது மாடிகள் 2013 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றிருந்தது. எனினும், மீதமாகவுள்ள மாடிகளை பயன்படுத்துவதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1996 இல் குண்டு வெடிப்புக்கு கட்டிடமானது உள்ளானதுடன் கொங்றீட் வீம்ஸ், சில்ப்ஸ் மற்றும் கட்டிடத்தின் சுவர்கள் வெடிக்கப்பட்டிருந்தது. எந்தவொரு அமைப்பு மதிப்பீடும் வாடகை உடன்படிக்கையில் ஈடுபடும் போது அமைப்பு பொறியியலாளரால் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) நட்டக்கழிவிற்கான ஏற்பாடு**

நட்டக்கழிவு செய்முறையில், ஆண்டிற்கான நட்டக்கழிவு ஏற்பாடுடன் சம்பந்தமாக பின்வரும் செயற்திறனற்ற தன்மைகள் அவதானிக்கப்பட்டது.

(i) கடன்கள் மற்றும் முற்பணங்களை பதிவதற்காக வங்கியானது பல முறைகளை பயன்படுத்துகின்ற போதிலும், வித்தியாசமான செயற்பாட்டு வகைப்படுத்தல்களின் கீழ் வாடிக்கையாளருக்கு கொடுக்கப்பட்ட அனைத்து வசதிகளையும் கருத்திற்கொள்கின்ற தன்னார்வ மத்திய பொறுப்பு அறிக்கையொன்று வங்கியில் இருக்கவில்லை. ஆகையால், ஒவ்வொரு வாடிக்கையாளரின் ஒட்டுமொத்த கலவையின் முறையான கூட்டுத்தொகையை உறுதிப்படுத்துவதற்கும் கடினமாகவிருந்தது. அத்தகைய வாடிக்கையாளர்களை வினைத்திறனானகவும் சரியாகவும் மதிப்பிடுவதற்கும் கடினமாகவிருந்தது. அதனால், முகாமைத்துவமானது அவர்களை ஆரம்ப நட்டக்கழிவு பதிவேட்டில் தனிப்பட்ட முக்கிய வாடிக்கையாளர்களாக (ஐஎஸ்எல்) இனங்காண முடிந்திருக்கவில்லை.

(ii) நட்டக்கழிவு நோக்கத்திற்காக வாடிக்கையாளரை மதிப்பிடும் போது, வங்கியானது ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் கடன் மீளளிப்பு தாள்களை பயன்படுத்துகின்றன. எனினும், செவ்வை மாதிரி பரீட்சிப்பில், சில கடன் மீளாய்வு தாள் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. வாடிக்கையாளரின் ஆகக்குறைந்த நிதிக்கூற்றுக்களானது மேற்கூறப்பட்ட தாள்கள் நிரப்பும் போது மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், சில தாள்கள் பாதுகாப்பு விபரங்கள், சீஆர்இ கூற்றுக்கள் ஏனையவற்றை உள்ளடக்காமல் பூர்த்தியாக்கப்படாத நிலைமையிலிருந்தது.

(iii) முழுமையாக நட்டக்கழிவுக்குட்பட்ட வாடிக்கையாளர்களிற்கு காசுப்பாய்ச்சலின் அறவீட்டின் குறைந்த சாத்தியத்தன்மையால், முகாமைத்துவத்தின் தற்போதைய நடைமுறையானது வாடிக்கையாளரின் முழுமையான நட்டக்கழிவுக்குட்படுத்திய இனங்காணப்பட்ட திகதியிலிருந்து அட்டுறு வட்டியை இடைநிறுத்தியிருந்தது. எனினும் சொல்லப்பட்ட நடைமுறையானது மாலைதீவிலுள்ள முழுமையான நட்டக்கழிவுக்குட்பட்ட வாடிக்கையாளர் தொடர்பில் விசேடமாக வங்கியின் தொடர்ச்சியாக அனைத்து கிளைகளினூடாக நிலைமையொன்றாக பிரயோகிக்க முடிந்திருக்கவில்லை.

(iv) சில வாடிக்கையாளருக்கு கொடுக்கப்பட்ட வசதிகள் மீள் கட்டமைக்கப்படும் நட்டக்கழிவு மதிப்பீட்டிற்கு எடுக்காமல் தொடர்ச்சியாக மிகுதி காலப்பகுதிகளுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. எனினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய வாடிக்கையாளர்களின் பிணைகளின் போதியதன்மை அல்லது செல்லுபடியாகும் தன்மை ஐயத்திற்குரியதாகவிருந்தது.

(v) நட்டங்களை ஏற்படுத்துவதற்காக செயற்பாட்டு சான்றினை வங்கி வைத்திருந்த போதிலும், தனிப்பட்ட காலக்கழிவிற்காக முக்கியமான அரசாங்க கடன்கள் மற்றும் முற்பணங்களை, வங்கி தனித்தனியாக கருத்திற் கொண்டிருக்கவில்லை. உதாரணமாக வங்கியானது நட்டக்கழிவு செய்முறைக்காக தனிப்பட்ட முக்கியமான வாடிக்கையாளர்களின் கீழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் மிஹின்லங்கா போன்றவற்றை வங்கி கருத்திற் கொண்டிருக்கவில்லை. அரச பொறியியல் கூட்டுத்தாபனமானது 2015/2016 ஆம் ஆண்டிற்காக எதிர்மறை உரிமையாண்மை நிலைமை, விற்பனை வருமானத்தில் பாரிய குறைவு மற்றும் முக்கிய நிதிசார் விகிதங்களின் பாதக நிலைமை போன்றவற்றிற்காக ரூபா 650 மில்லியன் பாரிய நட்டத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும், ரூபா 167 மில்லியன் பெறுமதியான பிணையின் கீழ் ரூபா 992 மில்லியன் கடன்களை வங்கி வழங்கியிருந்தது. மேலும், மிஹின் லங்கா 2016 ஒக்தோபர் 30 இலிருந்து அவர்களுடைய செயற்பாட்டை இடைநிறுத்தியிருந்ததுடன் வங்கியானது 2017 திசெம்பர் 31 இல் காலாவதியான திறைசேரியால் வழங்கப்பட்ட இணக்கல் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு கடனை வழங்கியது. நிலுவையாகவுள்ள மூலதன கடன் நிலுவை தொகை ரூபா 14 மில்லியன் பாதுகாப்பற்ற நிலுவையுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,433 மில்லியன் தொகையாகும்.

(vi) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசசார்பற்ற துறையின் மொத்தக் கடன் வெளிப்படுத்தல் ரூபா 843,104 மில்லியன் ஆகும். இது தொடர்பில் ரூபா 100 மில்லியன் கடன் தொகையை விஞ்சிய வாடிக்கையாளர் தொடர்பில் ரூபா 9,632 மில்லியன் நட்டக்கழிவு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், 100 சதவீத காலங்கடந்த 22 வாடிக்கையாளர்கள் தொடர்பில் ரூபா 8,760 மில்லியன் தொகையானது மேற்கூறப்பட்ட மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் கடுவெல ஹோல்டடிங், குணதிலக நிர்மாணங்கள், முதலீடு மற்றும் திறி ஸ்ரார் அப்பரல் 64 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

## 4.4 செயற்பாட்டு நடவடிக்கைகள்

### 4.4.1 வங்கியின் தகவல் தொழில்நுட்ப சூழல்

வங்கியின் தகவல் தொழில்நுட்ப சூழல் தொடர்பான மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பில், "OS400 முறைமையில் செயற்படுத்தப்பட்டு ஏற்கனவேயுள்ள இரகசிய பெயரை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேலும், "OS400 முறைமை இலுள்ள கடவுச்சீட்டு உறுதிப்படுத்தல்கள் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு சிறப்பு நடைமுறைகளின் பொது தரத்துடன் இருக்காததுடன் பயன்பாட்டாளர் விபரங்கள் இரகசியப்பெயர் இல்லாமல் OS400 முறைமையில்" இருந்ததுடன் மேற்கூறப்பட்ட முறைமைகளிலிருந்து இடைநிறுத்துகின்ற ஓய்வுபெற்ற ஊழியர்களின் வரவின்மை மற்றும் காலதாமதங்கள் தொடர்பிலான சந்தர்ப்பங்களிலிருந்தது.

### 4.4.2 மீளாய்வாண்டின் போது அறிக்கையிடப்பட்ட மோசடிகளினால் ஏற்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தியவெதும கிளையில் இடம்பெற்ற டோசடியில் ஏற்பட்ட ரூபா 10 மில்லியன் நட்டத்தில் 99 சதவீதம் வங்கியில் தொடர்ந்தும் பெறப்பட்டிருந்தது.

(ஆ) 15 வாடிக்கையளரால் போலியான ஆவணங்கள் மூலம் தனிப்பட்ட அனுராதபுர கிளையிலிருந்து ரூபா 15,025 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்தது. இத்தகைய கடன்கள் வழங்கப்பட முன்னர் வாடிக்கையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் உண்மைநிலையை நிரூபிப்பதற்கு வங்கியின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வாடிக்கையாளர் சார்பில் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சாதகமாக 18 மாதங்களிற்காக செயலாற்றல் முறியை கண்டி சூப்பர் தர கிளையால் வழங்கப்பட்டதுடன் இது வாடிக்கையாளர்களின் எழுத்து மூல வேண்டுதல்களால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதல்கள் இல்லாமல் மேலும் 06 மாதங்களிற்கு நீடிக்கப்பட்டது. தொடர்ந்து வாடிக்கையளரொருவர் மீதமாக தரவிருந்த ரூபா 50 மில்லியன் கடன்களிலிருந்து விலகியிருந்ததுடன் வாடிக்கையாளருக்கு எதிராக வங்கியால் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம், வங்கியானது உத்தரவாதமொன்றை கோரியிருக்காததுடன் ஏனெனில் வாடிக்கையாளர் வரலாற்றில் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு வேண்டியிருக்கவில்லை. பதவியணியினரின் அசட்டைத்தனம் மற்றும் வங்கியில் உள்ளக கட்டுப்பாட்டால் மேற்கூறப்பட்ட நட்டம் ஏற்பட்டது

(ஈ) டோமன்ற் கணக்குகளிலிருந்து ரூபா 150,000 தொகையானது கணக்குரிமையாளருக்கு தெரியாமலும் போலியான தகவல் வழங்குவதன் மூலமும் வவுனியா கச்சேரி அலுவலகத்தால் எடுக்கப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.

(உ) வங்கி மேலதிகப்பற்றொன்றை பெறுவதற்கு கட்டாயமாகவுள்ள முறைப்படியான தொட்டுணரக்கூடிய பிணை இல்லாமையால் வரையறுக்கப்பட்ட கடுவெல ஹோல்டிங் (தனியார்) கம்பனி தொடர்பில் மெற்றோபொலிரன் கிளை தொடர்பில் நிலுவையாகவுள்ள மீதி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,203 மில்லியன் நட்டக்கழிவுக்கு உட்படுத்த வேண்டியிருந்தது.

(ஊ) 46/2010(7) ஆம் இலக்க அலுவலக அறிலுறுத்தல்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அடகுவைக்கப்பட்ட நகைககளின் நியாயத்தன்மையுடன் திருப்தியடைந்திருக்க வேண்டும். எனினும், போலியான நகைகளிற்காக ஹேமாதஹம கிளையிலிருந்து ரூபா 103,000 தொகை வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பெறுகைத் திட்டம்

செயல்நடவடிக்கை திட்டத்துடன் இணையும் வகையில் மீளாய்வாண்டிற்கான வங்கியால் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வுக் குழு

2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பதினைந்து கணக்காய்வு குழுக் கூட்டங்களுடன் ஒப்பிடும் போது 2017 இல் பதினொரு கணக்காய்வு குழுக்கூட்டங்கள் நடைபெற்றன.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் வங்கியின் தலைவரிற்கு வழங்கப்பட்ட எனது விபரமான அறிக்கைகள் மூலம் வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கடன் நிர்வாகம் | - வாடிக்கையாளர்களின் மீள்கொடுப்பனவு இயலுமையை மதிப்பிடல்<br>- செயற்பாடற்ற முற்பண விகிதம்<br>- அதிகூடிய செயற்பாடற்ற வாடிக்கையாளர் மற்றும் கிளைகள்<br>- பற்றுக் கடன்கள் |
| (ஆ) | ஏரீஎம் இயந்திர மீதான கட்டுப்பாடுகள் | - ஏரீஎம் இயந்திரம் மீதான போதிய பாதுகாப்பு<br>- ஏரீஎம் இயந்திரங்களின் நிர்மாணம் மீதான உள்ளக கட்டுப்பாடுகள் |
| (இ) | தகவல் தொழில்நுட்பம் | - ஐரீ முறைமைகளினை பயன்படுத்துவதற்கு எதிரான கட்டுப்பாடுகள்<br>- இரகசியக் குறியீடுகள் மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள். |
| (ஈ) | மனிதவள முகாமைத்துவம் | - வங்கியின் உள்ளக பதவியணியால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான மோசடிகள்<br>- ஆட்சேர்ப்புக்கள் திட்டமின்மை |
| (உ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | - இனங்காணல் நோக்கங்களிற்காக நிலையான சொத்துக்களிற்கு முத்திரையிடாமை<br>- துப்பாக்கிகள் மீதான அறிக்கைகள் பராமரிக்காமை. |